இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

சகோதரர் சகோதரிகளே,
கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார். குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நாம் அவ்வன்பின் மூலம் இணைந்து உயிர் பெறச் செய்தார். நீங்கள் மீட்கப் பட்டிருப்பது அந்த அருளாலேயே. இயேசு கிறிஸ்துவோடு இணைந்த நிலையில் நாம் அவரோடு உயிர்த்தெழவும் விண்ணுலகில் அவரோடு அமரவும் செய்தார். ( எபே 2:46)

# நாம் இயேசுவின் ஒளியைத் தேடுபவர்களாவோம்!

## திருத்தந்தை வேண்டுகோள்

வத்திக்கான்: இயேசுவின் ஒளியின் மீது நமது பார்வையை நிலை நிறுத்துவோம், ஒளிவீசும் அவரது முகத்தை எப்போதும் நமது கண்களுக்கு நேராக வைத்திருப்போம் என்றும், அன்பு, இரக்கம், நம்பிக்கை நிறைந்த அவரது ஒளி நிறைந்த முகத்தை எல்லா நேரங்களிலும் தேடுபவர்களாக வாழ்வோம் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசுவின் ஒளியை, இயேசுவாகிய ஒளியைக் காணும் பார்வையை ஒருபோதும் மாற்றக்கூடாது, குறிப்பாக பாடுகளின் நேரத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் சோதனையின் தருணங்களில் ஒளியைக் காணும் தங்களது இந்தப் பார்வையை ஒருபோதும் இழக்கக்கூடாது என்பதை இதன் வழியாக இயேசு வலியுறுத்தினார் என்றும் கூறினார் திருத்தந்தை.

நிலத்தில் உழும் விவசாயிகள் தங்களது இலக்கில் கவனம் செலுத்தி ஒரே நேர்க்கோட்டில் நிலத்தை உழுவது போல, கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் நமது இலக்கில் கவனத்தை செலுத்தி, இயேசுவின் ஒளியைக் காண்பதை நமது வாழ்வின் இலக்காகக்கொண்டு செயல்பட வலியுறுத் தினார் திருத்தந்தை.

இயேசுவின் ஒளிக்கு நம் இதயங்களை, கண்களைத் திறப்போம் என்று கூறிய திருத்தந்தை அவர்கள், அவர் அன்பானவர், நிலையான வாழ்வளிப்பவர், துன்பமான



மற்றும் இக்கட்டான நேரங்களில் இரக்கமும், நம்பிக்கையும், எதிர்நோக்கும் கொண்ட அவரது முகத்தை நாம் தேடவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இறைவேண்டல், இறைவார்த்தைக்கு செவிசாய்த்தல், திருவருளடையாளங்கள் போன்றவை இயேசுவின் இத்தகைய ஒளியைக் காண நமக்கு உதவுகின்றன என்றும், திறந்த மனம் கொண்ட பார்வையை வளர்த்து, செபத்திலும், பிற மக்களிலும் இயேசுவின் ஒளியைத் தேடுபவர்களாக நாம் மாற வேண்டும் என்பதை தவக்காலத்தின் தீர்மானமாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்றும் கூறினார் திருத்தந்தை.

எனது வாழ்க்கைப்பயணத்தில் என்னுடன் வரும் கிறிஸ்துவின் மீது எனது பார்வையை நிலைநிறுத்துகின்றேனா? அமைதியான நேரங்கள், இறைவேண்டல், தூய நற்கருணை ஆராதனைக்கு முக்கியத்துவம் அளிக்கின்றேனா? என்னிலும் நான் சந்திக்கும் உடன் சகோதர சகோதரி களிடத்திலும் இயேசுவினது ஒளியின் சிறு கதிர்களைக் காண முயல்கின்றேனா? இதற்காக இறைவனுக்கு நன்றி கூற நினைக்கின்றேனா? என்று சிந்தித்துப் பார்க்கவும் திருப்பயணிகளுக்கு அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடவுளின் ஒளியால் நிறைந்து, சுடர்விடும் அன்னை மரியா, நம் பார்வையை இயேசுவின் மீது நிலைநிறுத்தவும், ஒருவரையொருவர் நம்பிக்கையுடனும் அன்புடனும் பார்க்கவும் நமக்கு உதவுவாராக என்று கூறி கூடியிருந்த திருப்பயணிகளுக்குத் தன் அப்போஸ்தலிக்க ஆசீரை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

*மெரினா ராஜ் – வத்திக்கான்*

# கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் புதிய பங்கு

**கோலாலம்பூர்:** *1983*-ல் சீரமைக்கப்பட்ட திருஅவை சட்டம் *515*-ன் படி கடந்த *22* சனவரி *2024* அன்று, கெப்போங், டேசா ஜெயாவில் அமைந்திருக்கும் கிறிஸ்து ஒளி எனும் பெயர் கொண்ட சிற்றாலயத்தை ஒரு பங்கு நிலைக்கு உயர்த்தினார் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள்.

கடந்த பிப்ரவரி 2-ம் திகதி, ‘ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல்’ விழா வன்று, இந்த அதிகாரப்பூர்வ நிகழ்வு பேராயரின் தலைமையில் திருப்பலியுடன் நிறைவேறியது. ஜாலான் 53, டேசா ஜெயாவில் இருக்கும் இந்த ஆலயம், இந்த வட்டாரத்தில் அதிகரித்து வரும் கத்தோ லிக்க மக்களின் ஞான வளர்ச்சிக்கும் பொதுநல வளர்ச்சிக்கும் பேருதவியாக இருக்கும் என்று தான் நம்புவதாகப் பேராயர் கூறினார்.

மேலும், திருஅவை சட்டம் *521*-ன் படி இப்புதிய பங்கிற்குப் பங்குத் தந்தையாக




அருள்பணி பீட்டர் அந்தோணி அவர்கள் நியமனம் பெறுவதாகவும் அறிவித்தார்

கடந்த காலங்களைப் போலவே, சுங்கை பூலோ, லூர்து அன்னை சிற்றாலயமும், செலயாங், கிறிஸ்து அரசர் சிற்றாலயமும் இப்பங்கின் பராமரிப்பில் இருந்துவரும் என்றும் தெரிவித்தார்.



*ஆர்.கே.*

# மூன்று மறைமாவட்டங்களில் நடைபெற்ற தேர்வுச் சடங்குகள்

## கோலாலம்பூர் மாமறைமாவட்டம்

கோலாலம்பூர்: ஆண்டுதோறும் தவக்கால முதல் ஞாயிறன்று நடைபெறும் முதியோருக்கான கிறிஸ்தவப் புகுமுக



பதிவேட்டில் பேராயர் ஜூலியன் கையொப்பமிடுகிறார்

சடங்குமுறையின் வேட்பாளர் தேர்வுச் சடங்கு கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் இவ்வாண்டு தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறன்று நடைபெற்றது.

அன்று, உற்சாகமும், மகிழ்ச்சியும் கலந்த 547 வேட்பாளர்கள் காஜாங், புனித திருக்குடும்ப பங்கு ஆலயத்தில் தேர்தல் சடங்கிற்காக, தங்கள் தாய் தந்தையர், ஆர்.சி.ஐ.ஏ. பணிக்குழுவினர் மற்றும் திருஅவை அருள்பணியாளர் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் தலைமையில் ஒன்றுகூடினர்.

பேராயர் ஜூலியன் தனது மறையுரையில் வேட்பாளர் தேர்தல் சடங்கில், கத்தோலிக்க திருஅவையின் உறுப்பினர்களாக ஆக வேண்டும் என்ற கடவுளின் அழைப்புக்கு அவர்கள் உண்மையாக இருந்ததற்காக முழு சமூகமும் அவர்களுடன் மகிழ்ச்சி அடைகிறது என்று அவர்களுக்கு தெரிவித்தார்.

## மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டம்

இங்கு கடந்த பிப்ரவரி 17ஆம் திகதி பிளந்தோங்கில் உள்ள மஜோடி மையத்தில்,



ஆயர் பெர்னர்ட் போல் அவர்களுடன் மறைமாவட்ட பிரதிநிதிகள்

முதியோருக்கான கிறிஸ்தவப் புகுமுக சடங்கின் தேர்வுச் சடங்கு ஆயர் பெர்னாரட் போல் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வு நான்கு மொழிகளில் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்க்கது. மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் மறைக்கல்வி ஆணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வின் வழியாக, மலாக்காவில் 65, வட ஜொகூரில் 17, மற்றும் தென் ஜொகூரில் 158 என ஆக மொத்தம் 2 4 0 பேர் திருமுழுக்குப் பெறவுள்ளனர்.

மறைமாவட்டத்தின் ஆயர், பெர்னர்ட் போல், அவர்கள் வேட்பாளர்கள் கற்றல் பயணத்தில் சந்தித்த கொடைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார், "கடவுள் இன்று உங்களுக்கு மூன்று கொடைகள அளித்துள்ளார்: அவருடைய சிலுவையின் திருமகன், விவிலியம் மற்றும் நற்கருணை. இந்த கொடைகளை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். கத்தோலிக்க நம்பிக்கையில் உங்கள் பயணத்தைத் தொடங்குங்கள்" என்று அறிவுறுத்தினார்.

## பினாங்கு மறைமாவட்டம்

கடந்த வார இறுதியில் (பிப்ரவரி 17 & 18) இரண்டு சிறப்பு திருப்பலிகளில் பினாங்கில் உள்ள புனித அமல உற்பவி அன்னை பங்கிலும், ஈப்போவில் இடைவிடா சகாய அன்னை பங்கிலும் எதிர்வரும் பாஸ்கா பெருவிழாவில் புகுமுக அருளடையாளங்களைப் பெறவிருக்கும் வடக்கு மாவட்டத்தில் உள்ள 229 சகோதர சகோதரிகளுக்கான தேர்வுச் சடங்கைக் காணவும் கொண்டாடவும் இறைமக்கள் ஒன்றுகூடினர்.

பினாங்கில், 14 பங்குகளைச் சேர்ந்த 148



கர்தினால் செபஸ்தியன் அவர்கள் பதிவேட்டில் கையொப்பமிடுகிறார்

வேட்பாளர்களும் ஈப்போவில், 9 பங்குகளைச் சேர்ந்த 81 வேட்பாளர்களும் இத்தேர்வுச் சடங்கில் முன்னிறுத்தப் பட்டனர்.

## துப்புரவும் ஞான ஒளியும் பெறும் காலம்

தவக்காலத்தில் வழக்கமாக முதல் ஞாயிறு நடைபெறும் தேர்வுச் சடங்கு தொடங்கி, தல பங்குச் சமுதாயத்தோடு தேர்வுப்பெற்றோர் ஒன்று சேர்ந்து ஞான ஒடுக்கத்தில் ஈடுபடுவார்கள். இவ்வாறு, பாஸ்கா விழாக்களைக் கொண்டாடவும் புகுமுக அருளடையாளங்களைப் பெறவும் தங்களை ஆயத்தப்படுத்துவார்கள். இந்த நோக்கம் நிறைவேற, ஆய்வுகள், நம்பிக்கை அறிக்கை (விசுவாசப் பிரமானம்) மற்றும் ஆண்டவர் கற்பித்த இறைவேண்டல் ஆகியவை அளித்தல் சடங்கும் இவர்களுக்காக நடத்தப்படும்.

### புனித வாரம்

| | |
|---|---|
| குருத்து ஞாயிறு | 24-3-2024 |
| புனித வியாழன் | 28-3-2024 |
| பெரிய வெள்ளி | 29-3-2024 |
| பாஸ்கா திருவிழிப்பு | 30-3-2024 |
| பாஸ்கா பெருவிழா | 31-3-2024 |

# தீயவை தீயினும் அஞ்சப்பட வேண்டும்!

இன்று தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு. இன்றைய வாசகங்கள் அனைத்தும் மனமாறி, நற்பணி செய்து இறைவனின் இரக்கத்தைப் பெற்று ஒளியாகிய கிறிஸ்துவிடம் திரும்பிவர அழைக்கின்றன.

முதல் வாசகத்தில், கடவுளின் இரக்கத்தை புறக்கணித்த மக்களின் தீச்செயல்களையும், அதனால், இறைவாக்கினர் எரேமியா வழியாக ஆண்டவர் தந்த தண்டனைத் தீர்ப்பையும் எடுத்துரைக்கிறது.

இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் அடிகள், `ஆண்டவரின் இரக்கம் தீர்ந்துபோகவில்லை, அவரின் பேரன்பு முடிவுறவில்லை' என்றும் நமது மீட்புக்கு ஆண்டவர் திருவுளமானார் என்று அறிவுறுத்துகிறார்.

தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார். உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார் எனும் பேருண்மையை நற்செய்தி வலியுறுத்துகிறது. இறைவன் இரக்கம் நிறைந்தவர்தான். சினங்கொள்ள தாமதிப்பவர்தான். ஆனால், அதையும் கடந்து, அவர் தண்டனை நமக்கு கிடைக்கின்றதென்றால், நிச்சயம்; பாவம் நம்மில் எங்கேயோ அதிகரித்துவிட்டது என்பதே உண்மை.

நாம் மனமாற வேண்டியவர்கள். அன்று, ஆதாம், ஏவாளுக்கு தண்டனை கிடைத்தது போல நமக்கும் கிடைக்கும் நாம் காலம் தாமதித்தால். அன்று சோதோம், கொமரோா நகர மக்களுக்கு தண்டனை கிடைத்தது. அனைத்து தண்டனையும், இறைவன் விரும்பிக் கொடுத்ததல்ல: மாறாக, அவர்கள் செய்த பாவத்திற்கான கூலிதான் அது என்பதை நினைவில் கொள்வோம்.

நாமும் ஒளியின் மக்களாக வாழாமல், இருளுக்குரிய பாவ நாட்டங்களில், தீய செயல்களில் ஈடுபடும்போது கடவுளின் தண்டனை நிச்சயம் உண்டு. நற்செய்தியின் படி தண்டனைத் தீர்ப்பளிக்க மானிடமகன் வரவில்லை என்பது உண்மைதான்.




ஆனால், ஒளி உலகிற்கு வந்திருந்தும், தம் செயல்கள் தீயனவாய் இருந்ததால் மனிதர் ஒளியைவிட, இருளையே விரும்பினர். இதில்தான் நமக்கு எதிரான தண்டனைத் தீர்ப்பு அடங்கியுள்ளது.

**தவக்காலம் 4-ஆம் ஞயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | குறி 36: 14-16, 19-23 |
| திரு.பாடல் | 137: 1-2. 3. 4-5. 6 |
| 2-ம் வாசகம் | எபே 2: 4-10 |
| நற்செய்தி | யோவான் 3: 14-21 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 4**

அழைப்புக்கேற்ற தூய வாழ்வு வாழவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இதை நன்கு உணர்ந்தவர்களாய், உண்மைக்கேற்ப வாழ்ந்து, ஒளியாம் இறைவனுக்கு ஏற்ற செயல்களைச் செய்து, தண்டனைத் தீர்ப்பிலிருந்து நம்மைக் காத்துக் கொள்வோம். ஆண்டவரின் உதவி நமக்குண்டு என்பதை நினைவில் கொள்வோம்.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*